மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 'சாலி அணைக்கட்டு' கட்டுகிற கருத்துருவோ, மதிப்பீடோ அரசின் பரிசீலனையில் இல்லை.

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சார உற்பத்தி.

*7106 டாக்டர் த. சாந்தகுமாரி :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாராபுரத்தில் காற்றின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் நல்ல காற்று விசையுடன் இருக்கும் என்று கருதப்படுகிறது. காற்றின் தன்மையை அறிய ஒரு உபகரணம் தாராபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு இந்த காற்றின் தன்மையை அறிந்து அதன் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் த. சாந்தகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒரு தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கும் திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்தோடு ஆக்கபூர்வமான முறையில் செயலாற்றி வருகின்ற இந்தத் தருணத்தில், மிகவும் பின்தங்கிய என்னுடைய தாராபுரம் தொகுதியில் தொழிற்சாலைகள் இயங்க மின்சாரம் அடிப்படையான தேவை என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டிலேயே என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற "ஃப்ரி ஏர்"-ஐப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து மக்களுக்கு உதவ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவை காற்று. அந்தக் காற்றினுடைய வேகம், Velocity, duration, distribution இவைகளெல்லாம் எந்த அளவுக்கு இருக்கிறதென்று தெரிந்த பிறகு தான் அந்த இடத்திலே காற்றாலைகளை அமைக்க முடியும்.

1990 ஆகஸ்டு 22]

அதற்காக இரண்டு டெஸ்டிங் உண்டு. ஒன்று, Manual Collection of Data என்பது. அந்தப் பரிசோதனையை தாராபுரத்திலே நாங்கள் நடத்தியிருக்கிறோம். அதிலே சாதக மான சூழ்நிலை வந்திருக்கிறது. அடுத்து, Automatic Collection of Data என்கின்ற அடுத்த பரிசோதனை நடத்த வேண்டியிருக்கிறது. தாராபுரத்திலே கோ-ஆப்டெக்ஸ் ஸ்பின்னிங் மில்ஸ் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஆலையை நிறுவ முன்வந்திருக்கிறார்கள். எனவே இந்த Automatic Collection of Data தயாரிப்பதற்கு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவாகும். அதை அந்த ஆலை நிர்வாகத்திடத் திலேயே கேட்டிருக்கிறோம். பதிலை எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோம். வந்த பிறகு அதுகுறித்து மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது, தாராபுரத்தில் காற்றின் தன்மை எப்படி இருக்கிறது என்பதை அறிய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சுல்தான்பேட்டையைப் பொறுத்தவரையில் காற்றின் தன்மையை அறிய வேண்டிய அவசியம் கிடையாது. பாலக்காட்டு கணவாயின் வழியாக வீசுகின்ற காற்றினுடைய முழு தாக்கமும் அந்தப் பகுதியிலே வீசுகின்றது. அங்கே ஏற்கெனவே இரு காற்றாலைகள் இருக் கின்றன. மின்சாரம் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு காற்றாலை மட்டும் டிரடிஷனல் டைப்பிலே இருக்கிறது. இன்னொன்று சுற்றுகின்ற காற்றாலை. அது இயங்குவதில்லை. ஆண்டுக்கு ஒரு முறை அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை ஹைதராபாத்திலேயிருந்து யாரோ வந்து இயக்கிப் பார்த்து விட்டு சென்று விடுவதாகச் சொல்கிறார்கள். காரணம் அந்தக் காற்றாலைக்கு அங்கே காற்று அதிகம் என்று சொல்கிறார்கள். இந்த 'டிரடிஷனல் டைப் ஆப்' காற்றாலைக்குப் போதுமான காற்று இருக்கிறது. ஒரே ஒரு காற்றாலை இருக்கின்ற காரணத்தால் அது 'நாட் வையபிள்' என்று சொல்கிறார்கள். குறைந்த பட்சம் மூன்று நான்கு காற் றாலைகள் இருக்குமேயானால் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே, மூன்றாக அல்லது நான்காக மாற்று வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்தக் காற்றாலைகள் வருடம் பூராவும் ஓடாது. வருடத் தில் 8,760 மணி நேரம் என்றால் அதிலே சுமார் 2,000 மணி நேரம்தான் ஓடும். வருடத்தில் நான்கைந்து மாதங்கள்தான் ஓடும். அது காற்றினுடைய வேகம், தாக்கம் இவைகளைப் பொறுத்தது. சுல்தான்பேட்டையில் ஏற்கெனவே ஒன்று இருக் கிறது. இன்னொன்று போடலாமா என்று ஆய்வில் இருக்கிறது.